Sri SAI RAM ENGINEERING COLLEGE

## Sri Sairam Engineering College - Induction Day 2016 celebrations in Media




ஸ்ரீ சாய்ராம் குழுமத்தைச் சேர்ந்த கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழாவின்போது பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு லியோமுத்து கல்வி அறக்கட்டளை சார்பாக உதவித் தொகை, கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. கல்லூரியின் தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து, கல்வி ஆலோசகர் ஜெயபிரகாஷ் காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### சாய்ராம் பொறியியல் கல்லூரிகளில்

# முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா

**சென்னை**

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் குழுமத்தைச் சேர்ந்த கல்லூரிகளில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 22-ம் ஆண்டு தொடக்க விழா மற்றும் ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்ப கல்லூரியின் 9-ம் ஆண்டு தொடக்க விழா ஆகியவை நடைபெற்றன. நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர்கள் கே.பழனிக்குமார், சி.வி.ஜெயக்குமார் ஆகியோர் வரவேற்றனர்.

கல்லூரியின் தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து தலைமை உரையாற்றும்போது, "சாய்ராம் குழும கல்லூரிகள் அண்ணா பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் தொடர்ச்சியாக முதல் 10 இடங்களை பெற்று வருகிறது. மேலும் பல்கலைக்கழக அளவில் 170 ரேங்க்களையும் பெற்றுள்ளது. சாய்ராம் கல்விக் குழுமம் இயற்கை சார்ந்த சூழலோடு தரமான கல்வியை வழங்கி வருகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய 50-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு அறம் அறக்கட்டளை சார்பாக ரூ.75 லட்சம் ரூபாய் மதிப்பிலான உதவித் தொகை வழங்கப்படுகிறது. லியோமுத்து கல்வி அறக்கட்டளை சார்பாக மாணவர்களுக்கு உதவித் தொகை, கல்வி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன" என்றார்.

நிகழ்ச்சியில் கல்வி ஆலோசகர் ஜெயபிரகாஷ் காந்தி பேசும்போது, "பொறியியல் மாணவர்கள் தங்கள் துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆட்டோமேஷன், கணினி, மொபைல் அப்ளிகேஷன் ஆகியவற்றின் மூலம் வர்த்தக மேம்பாட்டை அடைய வேண்டும். வாழ்வில் வெற்றி பெற மதி நுட்பத்தோடும், தன்னம்பிக்கையோடும் அயராது உழைத்து நாட்டின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும்" என்றார்.

கிருதண்யா கிருஷ்ணமூர்த்தி பேசும்போது, "மாணவர்கள் எதிர்கால சவால்களை திறம்பட கையாளுவதற்கு தங்களை தயார்படுத்திக்கொள்ள கல்லூரி வாழ்க்கை மிக முக்கியமானது. மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகள் சமுதாய வளர்ச்சிக்கு உதவும் வகையில் இருக்க வேண்டும்" என்றார்.

விழாவின்போது கல்லூரியின் ஆண்டுமலர், கல்லூரி செய்தி இதழ் ஆகியவை வெளியிடப்பட்டன. முதலாம் ஆண்டு துறை தலைவர் இராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.